**ONE TWO ACADEMY**

**12 - ஆம் வகுப்பு**

**தமிழ்**

**இயல் - 4**

**மதிப்பெண்கள்:-50** **கால அளவு: 1.30 மணி நேரம்**

I சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **10 x 1 = 10**

1. "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை" - இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள்

   அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி

2. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க .

   அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு

   இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

3. 'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர் புடைய சொல்?

   அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

4. சுரதா நடத்திய கவிதை இதழ்

   அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்

5. "விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற

   வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு" - இத்தொடர் தரும் முழுமையான பொருள்:

   அ) விண்ணும் வெண்மதியும் வேறு வேறு

   ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு

   இ) வெண்மதியும் முகிலும் வேறு வேறு

   ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு

6. ‘ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்’ என உரைக்கும் நூல்
   அ) சிலப்பதிகாரம் ஆ) வளையாபதி
   இ) குண்டலகேசி ஈ) சிந்தாமணி

7. உவமைக்கவிஞர் என்று சிறப்பிக்கப்படுபவர்
   அ) சுரதா ஆ) வெ.ராமலிங்கனார்
   இ) அப்துல் ரகுமான் ஈ) மு.மேத்தா

8. புறநானூற்றில் பயின்று வரும் பா
   அ) நேரிசை ஆசிரியப்பா ஆ) குறள் வெண்பா
   இ) சிந்தியல் வெண்பா ஈ) கலிவிருத்தம்

9. சொல்லுதலை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது
   அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா
   இ) கலிப்பா ஈ) விருத்தப்பா

10. சாலைப் போக்குவரத்து உதவிக்கு உரிய தொலைபேசி எண்
   அ) 108 ஆ) 101 இ) 103 ஈ) 109

**II எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும்** **8 X 2 = 16**

11. இடையீடு - எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?

12. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
   I. நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.
   II. ஐப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது.

13. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

14. எத்திசையிலும் சோ று தட்டாது கிட்டும்’ - யார்க்கு?

15. வசனம், கவிதை வேறுபாடு தருக.

16. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
   I. தலைமை II. பலகை

17.கீழுள்ள சொற்களை ஈற்றுச் சீராகக் கொண்டு குறள் வெண்பா / நேரிசை வெண்பா / இன்னிசை வெண்பா எழுத முயற்சி செய்யவும்.

கடல், வாள், மழை, தேன் , மரம்

18.. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?

19.ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?

20.புணர்ச்சி விதி : எத்திசை

**III எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 2 X 4 = 8**

21.“மூன்றான காலம் போல் ஒன்று” -எவை? ஏன்? விளக்குக.

22.மணலில் எழுதியது முதல் தற்காலம்வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

23.வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.

**IV எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

24.பின்வரும் பழமொழிகளை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.

1 யானைக்கும் அடிசறுக்கும், **4x2=8**

2 வினை விதைத்தவன் வினைஅறுப்பான்,

3 எறும்பு ஊரக் கல்லும் தேயும்,

4 ஊழி பெயரினும் தாம் பெயரார்.

25.‘சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு’ - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

**V எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

26.கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.

27.பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.